**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 01 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக ஒழுங்குவிதியின் 20 ஆம் உறுப்புரை மற்றும் பல்லைக்கழகச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது புதிய வகைப்படுத்தலின் பிரகாரம் ரூபா 22,359,873 தொகை கல்வி சபை | இந்த வகைப்படுத்தல் தொடர்பான வெளிப்படுத்தல் மற்றும் ஒப்பீட்டுத் தகவல்கள் 2024 ஆம் ஆண்டின் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவுகள் (Board of Study Payment) என தனியானதொரு உருப்படியாக ஏனைய மீண்டெழும் செலவீனங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 01 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பீட்டு பெறுமதிகள் வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பின் மூலம் மேலும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| **உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிட்டு கொள்கை 2.5 இன் கீழ் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அதற்கு முரணாக கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டண வருமானம் மற்றும் சில செலவினங்கள் காசு அடிப்படையில் இனங்காணப்படுவதாக கணக்கீட்டு கொள்கை இலக்கம் 4.5 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தமையால் ஒன்றுக்கொன்று முரணான கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருந்தது. அதற்மைய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை கூற்றில் நிலவிய செலுத்த வேண்டிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டணம் ரூபா 7,856,088 தொகையானது கடந்த வருட சீராக்கமாக மீளாய்வாண்டின் உரித்து | 2023 ஆம் ஆண்டு முதல் மாணவர்களின் கண்காணிப்பு கட்டணத்தை சேகரித்த சந்தர்ப்பத்திலேயே வருமானமாக இனம் காணுவதற்கும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் செலவினமாக இனம் காணுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br><br>அதன் காரணமாக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலவிய ரூபா 7,856,087.72 தொகையான செலுத்த வேண்டிய கண்காணிப்பு கட்டணங்கள் திரண்ட நிதியத்திற்கு (மீண்டெழும்) சீராக்கப்பட்டது. இதன் மூலம் நிதிச்செயலாற்றல் கூற்றுக்கு தாக்கம் ஏற்படுவது இல்லை என்பதுடன் நிதி நிலைமை கூற்றில் திரண்ட நிதியம் (மீண்டெழும்) மற்றும் நடைமுறை பொறுப்புகள் மீதிகளுக்கு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | கணக்கீட்டு கொள்கைகள் சரியாக பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாற்றங்கள் கூற்றில் மீண்டெழும் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு இருந்தது. | | |
| (ஆ) பட்டப் பாட நெறிகளுக்காக கிடைத்திருந்த ரூபா 250,881,975 தொகையான வருமானத்தில் ஒரு வருடத்திற்கு மேலதிக காலப்பகுதியுடனான பட்டப் பாட நெறிகளுக்கு கிடைத்த வருமானத்தை தனியாக இனங்காணாது மொத்த வருமானமும் ஆண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு காலப்பகுதிக்கும் உரிய வருமானம் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் ஆகியவற்றை இனங்காணுவதற்கு நடைமுறைக்கு சாத்தியமான வேலைத்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது. | ஆண்டுக்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| **உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக சுகாதார அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,597,375 தொகை மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படும் பாடநெறி கட்டணங்கள் ரூபா 88,000 தொகை மீளாய்வாண்டினுள் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | இந்தப் பணத்தை அறவிடுதல் தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. பெறவேண்டிய பாடநெறி கட்டணங்கள் தொடர்பில் சீராக்கங்கள் 2024 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| **உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 3 வருடங்கள் முதல் 8 வருடங்கள் வரையான காலப்பகுதியில் முன் கொண்டு வரப்படும் ரூபா 14,659,744 தொகையான நானாவித கடன் கொடுத்தோர் மீதியும், 3 முதல் 7 வருடங்கள் வரை ஆன காலமாக காணப்படும் ரூபா 38,313,816 தொகையான நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புத் தொகையும் 2 வருடங்கள் முதல் 9 வருடங்கள் | இந்த செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பில் மருத்துவ விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவனத்தின் கற்கைகள் மற்றும் பரீட்சைகள் பிரிவில் தகவல் சேகரித்தவாறு உள்ளதுடன், அந்த தகவல்களின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வரை பழமையான ஏனைய வைப்புக்கள் ரூபா 496,703 தொகையும் மீளாய்வாண்டினுள் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 11(அ) பிரிவு | உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது மீளாய்வாண்டில் ரூபா 115,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த முதலீடுகள் தொடர்பில் உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 371(5) | 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,155,800 கூட்டுத் தொகையான முற்பணங்கள் 2024 பெப்ரவரி 28 ஆம் தேதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த முற்பணங்களில் பெரும்பாலானவை 2024 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் அளவில் தீர்க்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியவற்றை எதிர்காலத்தில் துரிதமாக தீர்ப்பதற்கு உரிய வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 சனவரி 18 ஆந் திகதிய BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க திறைசேரி செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட சுற்றறிக்கைக் கடிதத்தின் 5 | பிணைமுறிகளை மீறிய பேராசிரியர்களிடமிருந்து மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா 10,826,505 தொகையை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05/2023 ஆம் இலக்கமுடைய பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஏழு வருட அடிப்படையில் அல்லது பட்டப்பின் படிப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாடு செல்லும் கல்வி சார்ந்த பதவியணியின் அங்கத்தவர்களின் விமான பயண கட்டணங்களை பிணைமுறிகளை மீறிய | சுற்றறிக்கைகள் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் பந்தி | நிதியத்தில் இருந்து தீர்க்கப்பட வேண்டியமையால் இந்தப் பணம் திறைசேரிக்கு அனுப்பப்படாது நிறுத்தி வைக்கப்பட்டது என்பது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,907,543 மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,656,665 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 22,564,208 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 48,195,793 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் அபிவிருத்தி நிதியத்தில் (PGIM Development Fund) காணப்படும் ரூபா 3,768,988 மீதியானது மீளாய்ண்டின் இறுதி வரையிலும் நோக்கத்திற்கு உரிய பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | அபிவிருத்தி நிதிய ஊழியர்களின் அறிவினை மேம்படுத்துவதற்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | உரிய நிதியத்தினை நோக்கத்திற்கு உரிய பணிகளுக்கு ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |